<u>2026 ஜூலை மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை

திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW16 (LW21) – பால்குமார் |
| தகப்பனார் பெயர்: | தங்கவேல் |
| ஊர்: | மொட்டனூத்து |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், மொட்டனூத்து |
| வயது : | 37 |

30.07.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 3 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மொட்டனூத்து கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2020ம் தேதி கடமலைக்குண்டு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது, கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் அழைப்பின்பேரில் கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற வழக்கு எண்.50/2020 வழக்கின் சம்பந்தமாக நீதிமன்றத்தில் சரணடைந்த 2வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன், உப்புத்துறை ரோடு, தங்கம்மாள்புரத்தை சேர்ந்த நீதிமன்ற

காவலில் இருந்த விசாரணைக்காக கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் இருப்பதாக சொன்னதின்பேரில் காவல் நிலையம் சென்றேன்.

2. மேற்படி 2 வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன் காவல் ஆய்வாளரிடம் கிராம நிர்வாக அலுவலரான என் முன்பும், கடமலைக்குண்டு கிராமத்தை சேர்ந்த சரவணன் த/பெ.லிங்குசாமி முன்பும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன் ஊட்டியில் தொழிற்பயிற்சி நிலையத்தில் Fitter படித்துள்ளதாகவும், சென்னை, காஞ்சிபுரத்தில் கடந்த 10 வருடங்களாக Renalt Nisan Company–ல் பணியிலிருப்பதாகவும், தனது சகோதரி சித்ராவை அவரது கணவரான செல்லப்பாண்டி குடித்துவிட்டு, அடித்து கொடுமைப்படுத்துவதாகவும், சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், செல்லப்பாண்டியை கொலை செய்ய உதவியாக இருந்ததாக தானாகா முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அதற்கு நாங்கள் சாட்சியாக இருந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம். 2 வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளார். (2 வது எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது). என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. நான் காவல்நிலையம் செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் பகல் 1.00 மணி இருக்கும். அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் கடமலைக்குண்டு கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தேன். எனக்கு உதவியாளர் உண்டா என்றால் இல்லை. 2 வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன் ஆய்வாளரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை

என்றால் சரியல்ல. கடமலைக்குண்டு ஆய்வாளர் சொல்லிக்கொடுத்ததின்பேரில் 2வது எதிரி தேவா (எ) தெய்வேந்திரன் த/பெ.மகாராஜன் வாக்குமூலம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

5. எனது அலுவல் பணிநிமித்தமாக காவல்நிலையத்திற்கு செல்வேன் என்றால் சரியல்ல. எனது உதவிக்காக ஓய்வு பெற்ற தலையாரி அல்லது வேண்டியவர்களை உதவிக்காக வைத்துக்கொள்வேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக உண்மைகளை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயாரித்து வைத்திருந்த வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு நான் அடிக்கடி செல்வதாலும், காவல்துறையின் உதவி தேவைப்படும் என்பதாலும், அவர்களுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1 முதல் 3, 9வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைத்ததின்பேரில் 1 முதல் 3, 9வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை 4 முதல் 8 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்கள்.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.30 18:21:31 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
30.07.2026